(2) தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 20/1974.)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1974) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'

என்று நான் முன்மொழிகிறேன்.

சிறு வணிகர்களுக்குச் சலுகை அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 3 (1), 7-ஏ (1) பிரிவுகளின் கீழ் வரி செலுத்துவதினின்றும் விலக்களிப்பதற்கான ஆண்டு மொத்த வியாபாரத் தொகை வரம்பை ரூ. 25,000 லிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்த அரசு முடிவு செய்தது. அதற்கு நிகராக, வணிகராகப் பதிவு செய்து கொள்வதிலிருந்து விலக்களிப்பதற்கான மொத்த வியாபாரத் தொகையின் வரம்பை ரூ. 15,000 லிருந்து ரூ. 30,000 ஆக உயர்த்தவும் கருதப்பட்டுள்ளது. ரூ. 50,000-க்குக் குறையாமலும் ஆனால் ரூ. 55,000-க்குக் குறைவாகவும் மொத்த வியாபாரத் தொகை உடைய வணிகர் ஒருவருக்கான வரி இணக்க வீதத்தையும் வரி விதிப்பு வீதத்தையும் ரூ. 876 லிருந்து ரூ. 840 ஆகக் குறைக்கவும் அரசு முடிவு செய்தது. அப்போதுதான் வரி இணக்க வீதத்தின் ஏதாவது இரண்டு நிலைகளுக்கிடையே உள்ள வேறுபாடு ரூ. 240 ஆக இருக்கும்.

வரி செலுத்துவதினின்றும் விலக்கு அளிக்கப்பட்ட ஆண்டு மொத்த வியாபாரத் தொகை வரம்பு ரூ. 50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளதால், ரூ. 35,000-க்கு மேபடாத மொத்த வியாபாரத் தொகை உள்ள சில வகை வணிகர்களுக்கு வரி செலுத்துவதினின்றும் விலக்களித்து மேற்சொன்ன சட்டத்தின் 3 (1) பிரிவின் வரம்பு நிபந்தனையைச் சேர்ந்த (ii) உட்பகுதியில் உள்ள விதித் துறையைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டியது அவசியமில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.

கையால் தயாரிக்கப்படும் சோப்புகளுக்கு வழங்கப்பட்ட வரிவிலக்கினை அரசு அண்மையில் நீக்கியுள்ளது. இப்பொருளுக்கு 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதிலிருந்து 2 சதவீத குறைந்த வீதத்தில் பலமுனை வரி

@ 134–142 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

விதிக்கப்பட்டுள்ளது. முதலாவது விவர அட்டவணையில் 37-வது இனத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வகை சோப்புகளும் ஒரு முனை வரி விதிக்கப் படுவதற்குட்பட்டதாகும். குறிப்பாக, கையால் தயாரிக்கப்படும் சோப்பு களுக்கு 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதி முதல் இந்த இனத் திலிருந்து விலக்களிக்கும் வகையில் மேற்படி இனம் திருத்தப்பட்டு உள்ளது.

வணிக வரிகள் குறித்த சட்டங்களையும் விதிகளையும் சீரமைப்பதற்கும் எளிதாக்குவதற்கும் சிறப்புப்பணியில் நியமிக்கப்பட்ட அதிகாரி தெரிவித்த பரிந்துரையின் அடிப்படையில் மேலும் 59 பொருட்கள் 1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ம் தேதி முதல் பல முனை வரி விதிப்பிலிருந்து ஒரு முனை வரி விதிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன. 1974-75 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையின் போது முதலமைச்சர் இதை அறிவித்தார்.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையைச் சேர்ந்த 70 (ஏ) 70 (பி) இனங்களின் கீழ் வரும் எல்லா வகை வெளிநாட்டு மது, வெறியம் சேர்ந்த மது ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரி வீதத்தை முறையே 24 சதவீதத்திலிருந்தும் 12 சதவீதத் திலிருந்தும் 25 சதவீதமாக உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59 (1) பிரிவின் கீழ் 1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ஆம் தேதி அன்று அறிவிப்பு ஒன்றை வெளியிட்டதன் மூலம் இம்முடிவுகள் அனைத்திற்கும் செயல் வடிவம் கொடுக்கப்பட்டது.

1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4 ஆம் தேதி அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பெரும்பாலான பொருள் விளக்கங்கள் அப்படியே சட்ட வரைவில் எடுத்தாளப்பட்டுள்ளன. ஆயினும் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடும் நோக்கத்திற்காக கீழ்க்காணும் இனங்கள் குறித்து சரக்குகள் பற்றிய பொருள் விளக்கத்தைப் பொறுத்த மட்டில் சில சொற்ப மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. அவையாவன :—

ஆயத்த ஆடைகள் : மேற்படி அறிவிப்பில், ஆயத்த உடைகள் அனைத்தையும் பல முனை வரி விதிப்பிலிருந்து ஒரு முனை வரி விதிப்புக்கு மாற்றக் கருதப்பட்டது. ஆனால், இப்போது இந்தச் சட்ட வரைவில், குறிப்பிட்ட தயாரிப்புப் பெயரின் கீழ், விற்பனை செய்யப்படும் ஆயத்த உடைகளுக்கு மட்டுமே ஒருமுனை வரி விதிக்கக் கருதப்பட்டுள்ளது. தயாரிப்புப்

பெயர் எதுவுமில்லாத ஆயத்த உடைகள் தொடர்ந்து பல முனே வரி விதிப்புக் குட்பட்டதாகும். அது போலவே பாக்கு, சீவல் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், வாசனைப் பாக்குத் தூளுக்கு உயர்ந்த வீதத்தில் வரி விதிக்கப் படலாமென கருதப்பட்டது. அவ்வாறே பாக்கு, வெற்றிலைப் பாக்கு, சீவல் ஆகியவற்றிற்கு 5 சதவீத வரியும், வாசனைப் பாக்குத் தூளுக்கு 7 சதவீத வரியும் விதிப்பதென்று தற்போது கருதப்பட்டுள்ளது.

பிரெஞ்சு காப்பியைப் பொறுத்த வரையில், காப்பி தயாரிப்பதற்குப் பயன் படும் காப்பிப் பொடியும், சிக்கரித் தூளும் சேர்ந்ததாகும். இந்த இரண்டு பொருள்களுக்கு வரியை 5½ சதவீதமாகக் குறைக்கக் கருதப்பட்டுள்ளது. 1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ம் தேதி அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில், மிட்டாய் பொருட்களும், ரொட்டிப் பொருட்களும் ஒரு முனே வரிக்கு உள்ளாக்கப்பட்டது. இவற்றை முன்பிருந்தது போலவே பல முனே வரி விதிப்புக்கு மாற்றுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அப்போதுதான் ரொட்டி, பன் ரொட்டி தயாரிக்கும் சிறு வியாபாரிகள் ரூ. 50,000-ஆக உயர்த் தப்படவிருக்கும் வரி விலக்கு சலுகையை முழுமையாக ஏற்க இயலும்.

சரக்குகள் விவரம் குறித்தும் ஒரு சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. மேற்சொன்ன சட்டத்தின் 59 (2) பிரிவைச் சேர்ந்த முதல் வரம்பு நிபந்தனையின் கீழ் மேற்சொன்ன அறிவிப்பிற்குப் பதிலாக சட்ட வரைவு ஒன்று தற்போதைய சட்ட மன்றக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட வேண்டும்.

1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ம் தேதி முதல் பலமுனே வரி விதிப்பி லிருந்து ஒருமுனே வரி விதிப்பின்கீழ் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள 59 பொருள்களைப் பொறுத்த வரை, தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனே வரிச் சட்டத்தின் 60-வது பிரிவில் உள்ள விதித் துறையைப் போலவே தற்காலிக விதித் துறை ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. 1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ம் தேதி அன்று அல்லது அதற்குப் பின்னர் விற்பனே செய்யப் பட்ட அல்லது வாங்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் இத்திருத்தச் சட்டத்தின் நோக்களுக்காக முதல் தடவை விற்பனே செய்யப்பட்டதாக அல்லது வாங்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும் என்பதே இதன் நோக்க மாகும்.

மேற்சொன்ன செயற்குறிப்பிற்குச் செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு பொது விற்பனே வரி (திருத்தச்) சட்ட வரைவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/74) கொண்டு வரப்பட்டு பரிசீலனைக்காக அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

இப் பிரேரணையை இம் மாமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை---

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 20/74) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, விற்பனை வரி விஷயத்தில் ஒரு நல்ல மாறுதலை இந்த மசோதா கொண்டுவந்திருக்கிறது. நல்ல மாறுதல் என்ற அர்த்தபுஷ்டியுள்ள வார்த்தையைப் போட்டுச் சொல்கிறேன் என்றால், அதற்குக் காரணமுண்டு. பொதுவாக எதிர்க் கட்சி என்ற முறையில் வரியை அதிகரிப்பது என்றால், நாம் ஆதரிப்பதற்கு முன்பு மூன்று, நான்கு முறை சிந்திப்போம். ஆனால் இது வரியைக் கூட்டுவதற்காக வந்துள்ள மசோதா அல்ல. விற்பனை வரி வசூலிப்பதை 'ரேஷனலைஸ்' செய்து, அதிலே பல விதமான சிக்கல்கள் இருந்து வந்ததை மாற்றி, பல கட்டங்களில் வசூலித்து வந்ததை ஒரு முனையில் வசூலிப்பதற்கு வழி செய்திருக்கிறது. வியாபாரிகளின் சங்கங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த ஒரு முனை விற்பனை வரி முறையைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இது ஒரு நல்ல காரியம்.

நான் இது சம்பந்தமாக ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடந்த விவாதத்தின்போதுகூட அதைப் பற்றிச் சொன்னார்கள். அதை மீண்டும் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கையால் செய்யப்படுகின்ற சோப்புகளுக்கு விற்பனை வரி கிடையாது. அது ஒரு குடிசைத் தொழில், அதற்கு விற்பனை வரி போடுவது கிடையாது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கருத்துக்கு ஒரு விளக்கம் இப்பொழுதே சொல்லி விடுவது நல்லது என்று கருதி அதைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே நம்முடைய அரசு ஒரு முனை விற்பனை வரி கிடையாது என்று முடிவு செய்து இப்பொழுது பல முனை விற்பனை வரி என்று தீர்மானிக்கும்போது, ரூ. 50,000 வரை டர்ன்ஓவர் உள்ள வியாபாரிகளுக்கு விற்பனை வரி இல்லை என்று முடிவு செய்தது. ஒரு முனை விற்பனை வரி என்று இருந்தால், ஒரு கட்டத்தில் கட்டாயமாக வரி வசூலாகிவிடும். பல முனை விற்பனை வரி என்றால், ரூ. 50,000

வரை டர்ன்ஓவர் உள்ளவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்படுகிறது. எனவே தான் நாங்கள் அந்த முடிவு எடுத்தபோது, இந்த விதி விலக்கு ஏற்பாடு செய்தோம் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, கையினால் செய்யப்பட்ட சோப்பு வகைகள் என்று சொல்லும்போது மர செக்குகள், கல் செக்குகள் இவைகளில் ஆட்டப்படும் எண்ணெய்களுக்கும் இதுவரையில் வரி கிடையாது, இப்பொழுதும் கிடையாது என்பதைப் பார்க்க வேண்டும். அதே மாதிரிதான் கையால் செய்யப்படும் சோப்புகளுக்கும் இருந்தது. அதை புதியதாக ஒருமுனை விற்பனை வரியில் சேர்த்தபோது, நான் முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக் கூறினேன். இப்பொழுது அது மாற்றப்பட்டு பலமுனை விற்பனை வரியில் சேர்த்து இரண்டு சதவீதம் வரி என்று போடப்பட்டிருக்கிறது. ரூபாய் 50,000 வரை வியாபாரம் செய்கின்றவர்களுக்கு விற்பனை வரி இல்லை என்று சொல்லும்போது, ஒன்றைப் பார்க்க வேண்டும். கையால் சோப்பு தயாரிக்கின்றவர்கள் 50,000 ரூபாய்க்கு சோப்புகள் தயாரிக்க மாட்டார்கள். அவர்களிடமிருந்து வாங்கி விற்கும் கடைகளுக்கு இரண்டு சதவீதம் விற்பனை வரி போடப்படும். அப்படிப் பார்க்கின்றபோது, இயந்திரங்களினால் செய்யப் படுகின்ற சோப்புகளுடன் இந்த சோப்பு வகைகள் போட்டியிட முடியாத நிலைமை ஏற்பட்டு இந்தத் தொழிலே நசித்துப் போகும் நிலைமை ஏற்பட்டு விடுமென்று நான் அஞ்சுகிறேன். அந்த நிலைமைக்கு இந்தத் தொழில் போய் விடக்கூடாது. ஒரு மூன்று, நான்கு பேர் சேர்ந்து நடத்தும் ஒரு சிறு கைத் தொழில் இது. அந்தத் தொழிலுக்கு ஊறு ஏற்பட்டுவிடுமென்று கருதுகிறேன். ஆகவே அரசு மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு மீண்டும் ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். 50,000 ரூபாய் வரையில் உற்பத்தியாளர்களாக இருந்தாலும், வியாபாரிகளாக இருந்தாலும், அவர்களுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படுகிறது. 50,000 ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கிறவர்களை சிறு வியாபாரிகள் என்று ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த முடிவிலேதான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர் களுடைய கருத்துக்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிய பிறகுதான், ஒரு முனை விற்பனை வரியிலிருந்து பல முனை விற்பனை வரியாகப் போட்டு, 50,000 ரூபாய் வரையில் டர்ன்ஓவர் உள்ளவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் விற்பனை உள்ளவர்களுக்கு வரி

விதிப்பதில் தவறு இல்லை என்று நாங்கள் கருதுகிறோம். இதிலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு முதலமைச்சர் அவர்களால் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள் கிறேன். கையால் செய்யப்பட்ட சோப்பு வகைகள் என்று சொல்லிக்கொண்டு, பிராண்ட் நேம் எல்லாம் போட்டுக்கொண்டு பெரிய வியாபாரம் செய்கின்றவர் களுக்கு வரி விதிக்காமல் விட்டுவிட முடியாது என்ற நிலைமையில்தான், இப்பொழுது இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பொதுவாக இந்த மசோதாவை வரவேற்றதற்கு நன்றி தெரிவித்து, இந்த அவை அதை நிறை வேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை —

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/74) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன் வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 20/74) திருப்பி அனுப்பப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/74) திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.